1014
1014

நமது தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

OFFICE OF THE ...
12 ... 1935
MADRAS

திருசிரபுரம்
செயின்ட் ஜோசப் கலாசாலைத்
தமிழாசிரியர்
வித்துவான் ரா. மீனாட்சிசுந்தரம்
எழுதியது

தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம்
திருச்சிராப்பள்ளி

1934 [விலை அணா 3

+3
031,6 /2
N34
121633

நமது தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

OFFICE OF THE ...
12 JAN 1935
MADRAS

திருசிரபுரம்
செயின்ட் ஜோசப் கலாசாலைத்
தமிழாசிரியர்
வித்துவான் ரா. மீனாட்சிசுந்தரம்
எழுதியது

தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம்
திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1934 [விலை அணா 3

OFFICE OF THE ...
12 JAN 1955
MADRAS

முகவுரை.

நமது இளஞ்சிறுவர்களுக்குத் தமிழ் மொழியை நன்முறையில் கற்பிப்பது இன்றியமையாததாகும். தமிழ் மொழியைக்கொண்டே அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டுமென்ற நோக்கத்துடனே இந்தப் பாடப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.

துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்தே, நமது இளஞ்சிறுவர்கள் நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியை எளிய முறையில் கற்றுத் தேர்ந்து நல்லறிவு பெறுமாறு, புதிய போதனுமுறைக்கிணங்க பாடங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

இப்புத்தகத்தில் இயற்கைத் தோற்றங்கள், கைத்தொழில், பயிர்த்தொழில், சுகாதாரம், அரசியல், பூமி சாஸ்திரம், தேச சரித்திரம், தாவர சாஸ்திரம், நீதி வாக்கியங்கள், நீதிக்கதைகள் முதலியன இளஞ்சிறார்களது உள்ளத்தில் ஊன்றிப் பதியும்படியாக அவர்களுக்கேற்ற சிறந்த எளிய நடையில் எழுதப் பெற்றுள்ளன.

நமது சிறுவர்கள் இனிய பாட்டுக்களைக் கேட்பதிலும், பாட்டுப் பாடுவதிலும் ஆவல் மிகுதியுமுடையவராதல் பற்றி அறிவு புகட்டும் நீதிக்கதைகள் எளிய பாட்டுக்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

பாடங்கள் வகுப்புக்குத்தக்கவாறு, சிறிது சிறிதாய்ப் புதிய சொற்களையும் புதிய சொற்றொடர்களையுஞ் சேர்த்துக் கற்பித்தல் என்ற முறைக் கிணங்க, முதலில் சிறிய பாடங்களாகவும், இடையில் சிறிது வளர்த்தும், முடிவில் பெரிய பாடங்களாகவும் அமைக்கப் பெற்றுள்ளன.

ஆங்காங்கு நீதிவாக்கியங்களும், கதைகளுக்குத் தக்க வாறு அமைக்கப்பெற்றுள்ளன.

பாடங்களுக்குத் தக்கவாறு படங்களும் அமைந்துள் ளன. முதலில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் படங் களைக் காட்டி, ஒவ்வொரு பாடத்திலுமுள்ள விஷயங்களைப் பிள்ளைகள் வாயிலாக வெளிப்படும்படி செய்து, கற்பித்தல் வேண்டும். பிறகு ஒவ்வொரு பாடத்தையும் பிள்ளைகளைக் கொண்டு படிக்கச் செய்யவேண்டும். ஆசிரியர்கள் அப் பாடத்தை விளக்கியபின், பிள்ளைகளின் அறிவைக் கேள்வி வாயிலாகப் பரிசோதிக்கலாம்.

குழந்தைகள் ஒவ்வொரு பாடத்தையும் தாங்களே பார்த்து எழுதவும், ஆசிரியர்கள் சொல்லி எழுதவும் பழக்க வேண்டும். இவ்வகையாக நடைபெற்று வருமாகில், பிள்ளை கள் இளமையிலேயே மேலும் மேலும் கற்க ஆவலுடைய வர்களாகி, நாளடைவில் இளமையிலிருந்தே கல்வி அறி வொழுக்கங்களிற் சிறந்து விளங்குவார்கள் என்பதில் ஐய மில்லை.

இப்பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்குத் தமிழ் மொழியின் மூலமாக, உலகியல் அறிவைப் புகட்ட ஒரு வகையில் உதவியாகுமென்ற நோக்கத்துடன் எழுதப் பட்டுள்ளனவாதலின், இதனைக்கண்ணுறும் கல்வி இலாக்கா அதிகாரிகளும், ஏனைய ஆசிரியர்களும் அன்புடன் ஆதரவு அளிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.

இதன்கண்ணுள்ள குறைகளைத் தெரிவிப்பார்களாயின், அவைகளை அன்புடன் ஏற்று நீக்குதற்கு முயல்வேன்.

திருசிரபுரம்
26-12-34.

வித்வான் ரா. மீனாட்சிசுந்தரம்

பொருள் அடக்கம்

1442
494.81.18

எண்	பொருள்	பக்கம்
1.	பாப்பா	7
2.	காக்கை	8
3.	ரோஜா	9
4.	ஏர்	10
5.	பாம்பு	11
6.	பெட்டி	12
7.	அடுக்குத் தொடர்கள்	13
8.	பிராணிகளின் ஒலி	14
9.	ஆறுவகைச் சுவைகள்	15
10.	நீதி வாக்கியங்ள்	,,
11.	நமது அரசர்	16
12.	அவயவங்கள்	17
13.	சுகாதார வாக்கியங்கள்	,,
14.	கிராமம்	18
15.	எறும்புகள்	19
16.	நாய்	20
17.	தாவரங்கள்	22
18.	சூரியன்	24
19.	வாரம், மாதம், வருஷம்.	25
20.	தாமரைப்பூ	26

எண்		பக்கம்
21.	கல்வியைப்பற்றிய வாக்கியங்கள்	27
22.	பேராசையுள்ள நாய் (பாட்டு)	28
23.	மூங்கில்	30
24.	தொழிலாளிகள்	31
25.	சுகவழி	34
26.	தபால்காரன்	35
27.	வாழை	38
28.	முருகன்	40
29.	புத்தியுள்ளவனே பெரியவன்	42
30.	விடுகதைகள்	44
31.	கரும்பு	45
32.	இந்திய நாணயங்கள்	47
33.	நரியும் திராட்சையும் (பாட்டு)	49
34.	இடைப் பையனும் எதிரொலியும்	51
35.	உலக நீதி (பாட்டு)	54
36.	ஆத்திசூடி (பாட்டு)	56

நமது தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

1. பாப்பா

1. இது ஒரு பாப்பா படம்.
2. இந்தப் பாப்பா நல்ல பாப்பா.
3. அப்பா! பாப்பாவைப் பாருங்கள்.
4. பாப்பா, அம்மா என்று சொல்லும்.
5. பாப்பா பால் குடிக்கும்.
6. பாப்பா பாட்டுப் பாடும்.
7. பாப்பா என்ன தரும்?
8. பாப்பா முத்தந் தரும்.



2. காக்கை

1. இது காக்கையின் படம்.
2. காக்கை என்ன நிறம்?
3. காக்கை கரிய நிறம்.
4. காக்கை அதிகாலையில் எழுந்திருக்கும்.
5. காக்கை கா, கா என்று கரையும்.
6. காக்கை மாலையில் குளிக்கும்.
7. காக்கைக்குச் சோறு இடு.
8. அது தன் இனத்தைக் கரைந்து கூப்பிடும்.
9. காக்கை இனத்தோடு சேர்ந்து உண்ணும்.
10. நீயும் இனத்தோடு சேர்ந்து இரு.
நாம் சேர்ந்து வாழ்வோம்.

3. ரோஜா

1. இது ரோஜாப் புஷ்பம்.
2. ரோஜாப்பூ செடியில் பூக்கும்.
3. ரோஜாச் செடியில் முள்ளுண்டு.
4. ரோஜாவில் பல வகை உண்டு.
5. வெள்ளை சிவப்பு மஞ்சள் முதலியன.
6. ரோஜாப்பூ பார்க்க அழகாய் இருக்கும்.
7. ரோஜா மிகுந்த மணமுள்ளது.
8. வனரோஜாவுக்கு வாசனை இல்லை.
9. ரோஜா மலரினால் மாலைகள் கட்டலாம்.
10. அதிலிருந்து வாசனைப் பொருள்கள் [செய்யலாம்.

மகிழ்ச்சி தருவது மலர்.

4. ஏர்

1. இந்த ஏர் மரத்தால் செய்யப்பட்டது.
2. ஏரில் கூரிய இரும்பு இருக்கும்.
3. ஏரைக்கொண்டு நிலத்தை உழுவார்.
4. ஏரில் இரண்டு எருதுகள் கட்டப்படும்.
5. உழுது பயிர் செய்வோர் உழவர்.
6. உழவர்களுக்கு வேளாளர் என்று பெயர்.
7. பயிர்த்தொழில் செய்வோர் பசி தீர்ப்பவர்.
8. உழவுத் தொழிலே உயர்வு தரும்.
9. மேழிச் செல்வம் கோழைபடாது.
10. உழுவார் உலகத்தார்க்கு ஆணி.

பயிர்த்தொழில் செய்.



5. பாம்பு

1. இது ஒரு நல்ல பாம்பு.
2. நல்ல பாம்புக்குப் படம் உண்டு.
3. பாம்புகளுக்கு வாயில் விஷம் உண்டு.
4. பாம்பு புற்றில் வசிக்கும்.
5. பாம்பு எலி தவளைகளைத் தின்னும்.
6. பாம்புகள் மிகவும் கொடியவை.
7. பாம்பு என்றால் படையும் நடுங்கும்.
8. பாம்பு கடித்தால் இறந்து போவார்.
9. தம்பீ! பாம்பின் அருகே செல்லாதே.
10. சிலர் பாம்புபோல் தீயவர்கள்.
11. தீயவர்களோடு ஒருநாளும் பழகாதே.

பாம்பொடு பழகேல்.



6. பெட்டி

1. இது ஒரு பெட்டி.
2. இந்தப் பெட்டி மரப்பெட்டி.
3. இது மரத்தால் செய்யப்பட்டது.
4. இந்தப் பெட்டியுள் பல அறைகள் உண்டு.
5. மரப் பெட்டி அழகானது.
6. பெட்டிகளில் பல வகை உண்டு.
7. இரும்பால் செய்தபெட்டி இரும்புப்பெட்டி
8. இரும்புப் பெட்டி அதிக விலை உள்ளது.
9. இரும்புப் பெட்டி அதிக உறுதியானது.
10. தகரத்தால் செய்த பெட்டி தகரப்பெட்டி.
11. மூங்கிலால் செய்த பெட்டி மூங்கிற்பெட்டி.
12. நாரால் செய்த பெட்டி நார்ப்பெட்டி.
13. ஓலையால் செய்த பெட்டி ஓலைப்பெட்டி.

7. அடுக்குத் தொடர்கள்

1. ஆடுகள் மந்தை மந்தையாய் மேயும்.
2. ஊரார் கூட்டம் கூட்டமாய்க் கூடினர்.
3. எறும்புகள் சாரை சாரையாய்ப் போகும்.
4. யாசகன் கடை கடையாய்ச் சென்றான்.
5. கரும்பைத் துண்டு துண்டாய் வெட்டு.
6. செடிகளை வரிசை வரிசையாய் நடு.
7. தேங்காய் குலை குலையாய்க் காய்க்கும்.
8. பலாப்பழம் சுளைசுளையாய் இருக்கும்.
9. பூக்கள் கொத்துக் கொத்தாய்ப் பூக்கும்.
10. புல்லைச் சுமை சுமையாய்க் கட்டு.
11. புத்தகங்களை அடுக்கடுக்காய் வை.
12 நெல்லைக் குவியல் குவியலாய்க் குவித்தார்.
13. வாழைப்பழம் சீப்புச் சீப்பாய் இருக்கும்.
14. விருந்தினர் பந்தி பந்தியாய் இருந்தனர்.

8. பிராணிகளின் ஒலி

1. ஆடு கத்தும்.
2. எலி கீச்சிடும்.
3. எருது முக்காரம் இடும்.
4. கழுதை கத்தும்.
5. காக்கை கரையும்.
6. குதிரை கனைக்கும்.
7. சிங்கம் கர்ச்சிக்கும்.
8. சேவல் கூவும்.
9. தவளை கத்தும்.
10. நரி ஊளையிடும்.
11. நாய் குரைக்கும்.
12. பசு கத்தும்.
13. பன்றி உறுமும்.
14. பாம்பு சீறும்.
15. புலி உறுமும்.
16. யானை பிளிறும்.

9. ஆறுவகைச் சுவைகள்

1. கற்கண்டு இனிக்கும்.
2. புளி புளிக்கும்.
3. கடல் நீர் உப்பு கரிக்கும்.
4. வாழைக்காய் துவர்க்கும்.
5. மிளகாய் உறைக்கும்.
6. வேப்பங்காய் கசக்கும்.
7. மாங்காயின் சுவை என்ன?
8. சர்க்கரையின் சுவை என்ன?
9. பாக்கு என்ன சுவை உடையது?

இனிப்பு, புளிப்பு, உப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கசப்பு, என சுவை ஆறு வகைப்படும்.

10. நீதி வாக்கியங்கள்

1. காலையில் எழுந்து கடவுளைத் துதிசெய்.
2. காலத்தில் உண்டு சீலமாய் ஒழுகு.
3. தந்தை தாயை வந்தனை செய்.
4. குருவை வழிபடல் பெரிய கடமை.
5. நித்தமும் குளித்துச் சுத்தமாய் இரு.
6. ஜீவ இரக்கம் சிறந்த ஒழுக்கம்.

11. நமது அரசர்

1. பிள்ளைகளே! இந்தப் படத்தைப் பாருங்கள். இவர் தான் நம்மை ஆளும் அரசர்.

2. இவர் இங்கிலாந்தில் வசிக்கிறார். இவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் என்று பெயர். இவரது மனைவியார் மேரி மகா ராணியார்.

3. இவர் அதிக அன்புடையவர். இவர் நமக்குப் பல நன்மைகளையும் செய்துவருகிறார்.

4. நமது நாட்டில் பல அரசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இவர் தலைவர். ஆதலால் இவருக்குச் சக்கரவர்த்தி என்ற பெயர் உண்டு.

பிள்ளைகளே! நமது அரசரிடத்தில்
அன்பாய் இருங்கள்.

12. அவயவங்கள்

தம்பி:-அண்ணு! அவயவங்கள் என்றுல் என்ன?

அண்ணன்:-தம்பீ! நமது உடலின் அங்கங்களுக்கு அவயவங்கள் என்று பெயர்.

தம்பி:-அண்ணு! அவயவங்களின் உபயோகம் என்ன?

அண்ணன்:-நாம் தலையால் வணங்குகிறேம். கண்களால் பொருள்களைக் காண்கிறேம். மூக்கால் வாசனை அறிகிறேம். காதினுல் ஓசையைக் கேட்கிறேம். வாயால் உணவை உண்கிறேம்; வாயால் பேசுகிறேம். கைகளால் வேலை செய்கிறேம். கால்களால் நடக்கிறேம்.

13. சுகாதார வாக்கியங்கள்

1. அதிகாலையில் துயிலெழு.
2. பற்களை விளக்கி உண்.
3. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
4. குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது.
5. கந்தை ஆனுலும் கசக்கிக்கட்டு.
6. கூழ் ஆனுலும் குளித்துக்குடி.
7. பசித்தபின் உண்பதே பரமசுகம்.
8. மிதமான உணவே மேலான சுகம்.
9. ஓடி விளையாடல் உடம்புக்கு உரம்.

14. கிராமம்

உபாத்தியாயர் :—முனியா! நீ எங்கிருந்து வருகின்றாய்?

முனியன் :—ஐயா! நான் எங்கள் கிராமத்திலிருந்து வருகின்றேன்.

உபா :—உங்கள் கிராமத்தின் பெயர் என்ன?

முனி :—எங்கள் கிராமம் சிந்தாமணி.

உபா :—முனியா! பல கிராமங்கள் சேர்ந்த நாட்டிற்கு என்ன பெயர்?

முனி :—தாலுக்கா.

உபா :—பல தாலுக்கா ஒன்று சேர்ந்த பெரிய ஊருக்குப் பெயர் என்ன?

முனி :—ஜில்லா.

உபா :—நமது ஊர் எந்த மாகாணத்தைச் சேர்ந்தது?

முனி :—நமது ஊர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தது.



15. எறும்புகள்

தம்பீ! இந்தப் படத்தைப்பார். இதில் அநேக எறும்புகள் இருக்கின்றன. எறும்பு களில் பலவகை உண்டு. சிற்றெறும்பு, சிவப் பெறும்பு, கட்டெறும்பு முதலியன.

எறும்புகள் கோடைகாலத்தில் இரையைத் தேடிவைக்கும். மாரிக்காலத்தில் இரையை உண்டு மகிழும்.

எறும்புகள் பூமிக்குள் வசிக்கும். அவை சோம்பல் உள்ளன அல்ல. எறும்புகள் எப் பொழுதும் சுறுசுறுப்பாய் இருக்கும். அவை கள் ஒழுங்காய்ச் செல்லும்.

தம்பீ! நீயும் சுறுசுறுப்பாய் இருக்க முயலு வாய்.



16. நாய்

இது ஒரு நாய். நாய்களில் பலவகை உண்டு. அவை சடை நாய், கோம்பை நாய் முதலியன.

நாய்க்கு முகம் நீளமாயிருக்கும். நாயின் நாக்கு நீளமானது. நாய் தன் மூக்கினால் மோப்பம் பிடிக்கும். அதன் காதுகள் நிமிர்ந்தே இருக்கும். சில நாயின் காதுகள் மடிந்து படிந்திருக்கும்.

அது தன் நாவினால் தண்ணீரை நக்கிக் குடிக்கும். அதன் உடல் நீண்டு வளைந்திருக்கும்.

நாயின் கால்கள் உறுதியானவை. ஆகையால் அது நன்றாக ஓடும். கால்களில் விரல்கள் உண்டு. விரல்களின் நுனியில் நகங்கள் உண்டு.

நாயின் வால் வளைந்து சுருண்டிருக்கும். அப்பொழுது அது அழகாயிருக்கும். சிலர் இரக்கமின்றி நாயின் வாலை வெட்டி அழகு பார்ப்பார்கள். அது சரியன்று. சடை நாயின் வாலில் மயிர் அடர்ந்திருக்கும்.

நாய் தன்னை வளர்ப்பவரை மறக்காது. ஒருவர் தனக்குச் செய்த நன்றியை அது மறக்காது. நாய் தன்னை வளர்ப்பவரைக் கண்டால் அது தன் வாலை ஆட்டும்.

அது திருடர்களையும் புதிய மனிதர்களையும் கண்டால் குரைக்கும். அது, மிகுந்த நன்றியறிவுடைய பிராணி. நாய் வீட்டைப் பாதுகாக்கும். சில நாய்கள் வேட்டையாட உபயோகப்படும்.

நாயை அடிக்காதே. அதனிடத்தில் அன்பாயிரு. அது உன்னைக்கடிக்காது.

பாலர்களே! நீங்களும் ஒருவர் செய்த நன்றியை எப்பொழுதும் மறக்காதீர்கள்.

நன்றி மறவேல்

17. தாவரங்கள்

பிள்ளைகளே! இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் புல்லும், செடியும், கொடியும், மரமும் காணப்படுகின்றன அல்லவா? அவைகளுக்குத் தாவரம் என்று பெயர்.

புல் தரையோடு தரையாய் முளைத்திருக்கும். இது பசுமை நிறமானது. இது சிறிது உயரம் வளரும். இதன் வேர் நார்போலிருக்கும். புல், கோரைப்புல், அறுகம்புல் என்று சிலவகைப் படும். இவை மாடு, குதிரைகளுக்கு உணவாக உபயோகப்படும்.

செடிகள் இரண்டு மூன்றடி உயரம் வளரும். இவற்றின் தண்டு எளிதாய் இருக்கும். கத்தரிச் செடி, மிளகாய்ச்செடி மல்லிகைச் செடி முதலியன செடிகள் இனத்தைச் சேர்ந்தன. இவைகள் மரத்தைப்போல் நீண்ட நாட்கள் இருக்க மாட்டா.

கொடிகளும் பூமியில் முளைக்கும். ஆனால் இவைகள் மரங்களையும் தூண்களையும் பற்றிப் படரும். மல்லிகைக்கொடிபோன்ற சில கொடிகள் பூ மாத்திரம் பூக்கும். அவரை, பரங்கி போன்ற சில கொடிகள் பூத்துக் காய்க்கும். இக் கொடிகள் செடிகளைக்காட்டிலும் சீக்கிரம் அழியும்.

மரம் ஓங்கி வளரும். மரங்களில் பலவகையுண்டு. பலாமரம் போன்ற மரங்கள் பூக்காமலே காய்க்கும். மாமரம்போன்ற மரங்கள் பூத்துக் காய்க்கும். பாதிரி மரம் போன்ற மரங்கள் பூத்தாலும் காய்க்காது. அடிமரம் பருத்திருக்கும். அடிமரத்தின்மேல் பல கிளைகள் இருக்கும். தென்னை மரம், பனைமரம் முதலிய மரங்களுக்குக் கிளைகள் இல்லை.

இம்மரத்தின் அடிப்பாகம் பூமியின் கீழ் ஓடிப்பரந்திருக்கும். அதற்கு வேர் என்று பெயர். வேரின் நுனியில் துவாரமிருக்கும். வேர், அதன்வழியாக நீரையும் பூமியின் சாரத்தையும் இழுத்து மரத்தை வளர்க்கும்.



18. சூரியன்

சூரியன் அதிகாலேயில் உதிக்கும். அப்பொழுது அது பொன்னிறமாய்த் தோன்றும். சிறிது நேரத்தில் அது ஒளிவீசிப் பிரகாசிக்கும். அப்போது அது நெருப்புப்பந்துபோல் இருக்கும். சூரியன் மாலேயில் மறையும்.

சூரியன் உதயமாகும் திசை கிழக்கு. சூரியன் மறையும் திசை மேற்கு. கிழக்கே பார்த்து நின்ருல், நமது இடது பக்கம் வடக்குத்திசை. நமது வலது பக்கம் தெற்குத்திசை.

சூரியன், நாம் வசிக்கும் பூமியைவிடப் பெரியது. அது அதிகதூரத்தில் இருக்கிறது. ஆதலால் அது நமது கண்ணுக்குச் சிறிதாய்த் தெரிகிறது.

176633

சூரியன் நமக்கு வெப்பத்தையும் ஒளியையும் தருகிறது. சூரியன் இருந்தால்தான் மழை பெய்யும். சூரிய வெளிச்சம் இல்லாவிட்டால் மரம், செடி, கொடிகள் வளரா. உயிர்கள் வாழா.

சூரியன் பிரகாசிக்கும் காலம் பகல் எனப்படும். சூரியன் பிரகாசிக்காத காலம் இராக்காலம் எனப்படும். பகலில் யாவரும் வேலை செய்வார்கள். இரவில் யாவரும் தூங்குவார்கள்.

---

19. வாரம், மாதம், வருஷம்.

ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாளாகும். ஏழு நாள்கள் சேர்ந்தது ஒரு வாரமாகும்.

ஏழு நாள்கள் ஆவன :—ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

நான்கு வாரங்கள் கொண்டது ஒரு மாதமாகும். முப்பது நாள்கள் கொண்டதும் ஒரு மாதமாகும். சிலமாதங்களுக்கு முப்பத்தொரு நாள்களும் உண்டு.

பன்னிரண்டு மாதங்கள் கொண்டதற்கு ஒரு வருஷம் என்று பெயர்.

பன்னிரண்டு தமிழ் மாதங்கள் :—சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி.

பன்னிரண்டு இங்கிலிஷ் மாதங்கள் :—ஜனவரி, பெப்ருவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன், ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்.

---

20. தாமரைப்பூ

பூக்கள் பார்ப்பதற்கு அழகாய் இருக்கும். அவைகளில் பல நிறங்கள் உண்டு. சில பூக்கள் பெரியவையாயும், சில சிறியவையாயும் இருக்கும்.

பூக்களில் சிறந்தது தாமரைப்பூ. பெரும்பாலும் எல்லாப் பூக்களுக்கும் மணம் உண்டு. சில பூக்களுக்கு வாசனை இல்லை.

பூக்கள் எல்லாம் நான்கு வகையில் அடங்கும். அவையாவன :—

1. சில பூக்கள் மரங்களில் மலரும். அவை தாழம்பூ, பன்னீர்ப்பூ, சண்பகப்பூ, வேப்பம்பூ முதலியன.

2. சில பூக்கள் செடிகளில் உண்டாகும். அவை மல்லிகைப்பூ, முல்லைப்பூ, ரோஜா, ஊமத்தம்பூ முதலியன.

3. சில பூக்கள் கொடிகளில் உண்டாகும். அவை சம்பங்கிப்பூ, முல்லைப்பூ, மல்லிகைப்பூ, பீர்க்கம்பூ, பரங்கிப்பூ முதலியன.

4. சில நீரில் உண்டாகும். அவை தாமரை, ஆம்பல் முதலியன.

நமது நாட்டில் பெண்களும், சிறுவர்களும் தலையில் பூவைச் சூட்டிக்கொள்வார்கள்.

---

21. கல்வியைப்பற்றிய வாக்கியங்கள்

1. ஆசான் சொல்வதை அமைதியாய்க்கேள்.
2. காலத்தில் உண்டு பள்ளிச்சாலைக்குச் செல்.
3. வழியில் பிறரோடு விளையாடாதே.
4. கற்ற பாடத்தை முற்றவும் சிந்தைசெய்.
5. கேட்ட பாடத்தை மீட்டும் படிப்பாய்.
6. புத்தகம் செவ்வையாய் வைத்துப்போற்று.

7. கெட்ட பழக்கம் சற்றும் ஒட்டாதிரு.

8. கல்வியே நல்ல செல்வமாகும்.

9. கற்றவரே சீர் பெற்றவர் ஆவார்.



22. பேராசையுள்ள நாய்.

("வாசு தேவனே—வந்தாளுமையனே" என்ற மெட்டு)

1. புவியில் நாயொன்று-இரை
   புசிப்பதற்கின்றி
   தவித்துத் தேடித் தேடி-வாடித்
   தயங்கி அலைந்ததே

2. கடையொன் றதனிலே-சிறு
   கறித்துண்டொன்றையே

தடையி லாமல் கௌவிக்கொண்டு
தாவிச் சென்றதே.

3. வழியி லாற்றினில்-பாலம்
வாய்த்த இடத்திலே
தெளிந்து ஓடும் பளிங்குநீரில்
தெரிந்த சாயலைக்

4. கண்ணிற் கண்டதே-மனம்
கடுக டுத்ததே
திண்ணமாகநிழலின் கறியைத்
தின்ன எண்ணியே

5. ஆசை கொண்டதால்-நாயும்
அறிவிழந்ததே
யோசியாமல் கறியும் வீழ
ஓடிப் பாய்ந்ததே

6. நாயும் நாணியே-மிக
நடுங்கி நீந்தியே
வாயில் கறியும் போனபின்பு
வாடி வந்ததே

7. உற்ற கறியையே-இழந்(து)
ஓய்ந்த நாய்போலும்
பெற்ற செல்வம் போது மென்று
பேணி டாமலே

8. ஐயோ ஆசையால்-தினம்
அலையும் மாந்தர்கள்
கையிலுள்ள பொருளும் போகக்
கவலை கொள்வரே

23. மூங்கில்

1. மூங்கில் ஒருவகை மரம். மற்ற மரங்களைப்போல மூங்கிலும் பயன்படும். மூங்கில் புதர் புதராய் வளரும். அது ஆற்றோரங்களில் மிகுதியும் அடர்த்தியாய் வளரும்.

2. மூங்கிலைத் தோட்டங்களிலும் காடுகளிலும் வைத்துப் பயிர் செய்வார். மூங்கில் மலைகளிலும் அதிகமாக வளரும். மலைகளில் உண்டாகும் மூங்கில் மிகவும் உறுதியாய் இருக்கும்.

3. மூங்கில் நீண்டு ஓங்கி வளரும். சில மூங்கில்கள் நூறடி உயரம் வளரும். அதன் இலைகள் கத்திபோல் நீண்டு ஒடுங்கியிருக்கும். மூங்கில் பல வருஷங்கள் வரையிலும் அழியாமல் இருக்கும். மூங்கிலின் கணுக்களில் தோன்றும் வார்களை வெட்டி விடுவார்கள். அப்போது மூங்கில் நீண்டு வளரும்.

4. மூங்கிலின் மேற்புறம் கெட்டியாய் இருக்கும். உட்புறம் பொந்தாய் இருக்கும்.

5. மூங்கில் நமக்கு அதிக உபயோக மானது. மூங்கிலின் கழிகளைப் பந்தலுக்குக் கால் களாக உபயோகிப்பார்கள். மூங்கில்களை வீடு களின்மேல் பரப்பி ஓடுகளால் மூடுவார்கள். மூங்கிலின் சிறு முள்ளினால் வேலி கட்டுவார்கள். மூங்கிலை வளைத்துப் பல்லக்குச் செய்வார்கள். மூங்கிலைப் பிளந்து தட்டிகளும், கூடைகளும், பாய்களும் முடைவார்கள்.

---

24. தொழிலாளிகள்

இவன் ஒரு தச்சன். இவனது வேலை தச்சுவேலை. தச்சு வேலை ஒரு உபயோக மான தொழில். இவன் மரச் சாமான்களைச் செய்து கொடுப்பான். உளியும், ரம்பமும் இவனது முக் கிய ஆயுதங்கள். மரப்பெட்டி, நாற்காலி, மேஜை முதலியவைகளை இவன் செய்வான்.

இந்தப்படத்தைப் பார். ஒருவன் இரும்பை நன்ருய் நெருப்பில் காய்ச்சி அடிக்கிருன். அவன் இரும்பால் பல சாமான்கள் செய்வான். அவன் நமக்கு அரிவாள், மண்வெட்டி, கடப்பாரை, கோடரி, சங்கிலி முதலிய இரும்புச் சாமான்களைச் செய்து கொடுப்பான். இரும்பு வேலை செய்பவன் **கொல்லன்.**

இவன் கொத்தன். இவன் செங்கல்லும் சுண்ணம்பும் கொண்டு இந்த வீட்டைக் கட்டுகிருன். நாம் வசிக்கும் வீட்டைக் கட்டிக் கொடுத்தவன் இவனே. வீடுகட்டுகிறவன் **கொத்தன்.**

இந்தப்படத்தைப் பார். இங்கு வேலை செய்து கொண்டிருப்பவன் கன்னுன். இவன் பித்தளையாலும், தாமிரத்தினுலும் பாத்திரங்கள் செய்வான். நமது வீடுகளிலிருக்கும் தவலை, குடம் முதலியவைகளைச் செய்து கொடுத்தவன் இவனே.

இவன் ஒரு குயவன். இவன் பானை செய்கிறான். இவன் மண்ணைப் பிசைந்து சக்கரத்தில் வைத்துச் சுற்றிப் பல மண் பாண்டங்களைச் செய்வான். பிறகு அவைகளைக் காயவைத்து, சூளையில் வைத்துச் சுடுவான். நமது வீடுகளில் இருக்கும் சட்டி, பானை, குடம் முதலிய மண் பாண்டங்களைச் செய்து கொடுத்தவன் இவனே. மண் பாண்டம் செய்பவன் குயவன்.



இந்தப்படத்தைப் பார். இதில் ஒருவன் கழுதையை ஓட்டிக்கொண்டு போகிறான். அவன் முதுகில் இருக்கும் மூட்டையைப் பார். அது அழுக்குத்துணி மூட்டை. இவன் அழுக்குத் துணிகளை உவர் நீரில் நனைத்துத் துவைத்துச் சுத்தம் செய்து கொடுப்பான். துணி வெளுப்பவன் வண்ணான்.

இந்தப் படத்தில் ஒருவன் துணி நெய்கிறான். இவனுக்குச் சேணியன் என்று பெயர். இவன் செய்வது நெசவுத் தொழில்.

தறியில் துணிகள் நெய்யப்படுகின்றன. இவன் பருத்தியாலும் பட்டாலும் துணி நெய்வான். நமது ஆடைகளைச் செய்து கொடுப்பவன் இவனே. துணி நெய்பவனுக்குச் சேணியன் என்று பெயர். நமது நாட்டில் நெசவுத்தொழில் அதிகம்.

---

25. சுகவழி

1. பிள்ளைகளே! நீங்கள் தினந்தோறும் காலையில் படுக்கையில் இருந்து எழுந்திருக்க வேண்டும். காலையில் எழுவது நல்ல பழக்கம். எழுந்தவுடன் கடவுளைத் துதிக்கவேண்டும்.

2. பிறகு பல்லைத்துலக்கி, வாய் கொப்பளிக்க வேண்டும். முகம், கை, கால்களை நன்ருகக் கழுவவேண்டும்.

3. எப்பொழுதும் குளித்துவிட்டுச் சாப்பிடவேண்டும். குளிக்காவிட்டால் சொரி, சிறங்கு முதலிய நோய்கள் உண்டாகும். எப்பொழுதும் அழுக்கில்லாத ஆடையை உடுத்த வேண்டும்.

4. நன்ருய்ப் பசித்த பிறகுதான் சாப்பிட வேண்டும். உண்ணும் போது நன்ருக மென்று

தின்ன வேண்டும். அளவாகச் சாப்பிட வேண்டும். அழுகிய பண்டங்களைத் தின்னலாகாது.

5. நாம் சுத்தமான தண்ணீரைக் குடிக்க வேண்டும். தண்ணீரைக் காய்ச்சிக் குடித்தல் நல்லது.

6. நல்ல காற்று வீசுகின்ற இடத்தில் குடியிருக்க வேண்டும். சுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டும்.

7. மாலையில் நன்றாக ஓடி ஆடி விளையாட வேண்டும். ஓடி விளையாடுவது உடம்புக்குப் பலத்தைத் தரும்.

பிள்ளைகளே! நீங்கள் இந்த விதமாக நடப்பீர்களானால் நோயின்றி வாழலாம்.

நோய்க்கு இடம் கோடேல்.

---

26. தபால்காரன்

முத்து :-அண்ணா! இவன் யார்?

அண்ணன் :-இவன்தான் தபால்காரன்.

முத்து :-அண்ணா! இவன் என்ன கொண்டு வந்திருக்கின்றான்.

அண்ணன் :- இவன் நமக்கு ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறான்.

முத்து :- அண்ணா! அக்கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது?

அண்ணன் - மதுரையிலிருந்து வந்திருக்கிறது.

முத்து :- நீங்கள் கடிதத்தைப் பிரிக்காமலே எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?

அண்ணன் :- இதோ பார். தபால் முத்திரை மதுரை என்றிருக்கிறது.

முத்து :- அவர்கள் மதுரையில் இதை எப்போது எழுதிப் போட்டிருப்பார்கள்?

அண்ணன் :- அவர்கள் இதை நேற்று எழுதிப் போட்டிருப்பார்கள்.

முத்து :- அண்ணா! நீங்கள் அதை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?

அண்ணன் :-அவ்வூரில் இட்ட முத்திரையில் தேதி இருக்கும்.

முத்து :-அண்ணு! அந்தக்கடிதம் இங்கு எப்படி வந்தது.

அண்ணன் :-அவர்கள் கடிதம் எழுதி மதுரையில் உள்ள தபால் பெட்டியில் போடுவார்கள். தபால் வேலைக்காரன் அக்கடிதத்தை எடுத்துமுத்திரை போடுவான். பின் அவைகளை ஒன்றுசேர்த்து ஒரு பையிலிட்டுக் கட்டுவான். கடிதத்தில் விலாசம் எழுதப்பட்டிருக்கும். அந்த விலாசத்தின்படி பல ஊர்களுக்கும் அனுப்புவான். அந்தந்த ஊரிலுள்ள தபாலாபீசில் இருப்பவர்கள் அப்பையை அவிழ்த்து முத்திரை யிட்டுக் கொடுப்பார்கள்.

முத்து :-அண்ணு! அந்தக்கடிதத்தின் மேல் இருக்கிற படம் யாருடைய படம்?

அண்ணன் :-அது நமது அரசருடைய படம். கடிதம் கொண்டுபோவதற்குக் கூலியாக நாம் அந்தத் தலையை வாங்கிக் கடிதத்தில் ஒட்ட வேண்டும்.

முத்து :-அண்ணு! இப்பொழுதுதான் எனக்குத் தபால் சங்கதிகள் யாவும் நன்றாய்த் தெரிந்தன.

27. வாழை

1. பிள்ளைகளே! நீங்கள் வாழை மரத்தைப் பார்த்திருப்பீர்கள். வாழை மரம் நமக்கு அதிக உபயோகமானது.

2. அது வீட்டுக் கொல்லைகளிலும், தோட்டங்களிலும், வளரும். உஷ்ணமான தேசங்களில் மிகுதியாகப் பயிராகும்.

3. வாழையில் பலவகை உண்டு. பூவன் வாழை, ரஸ்தாளிவாழை, செவ்வாழை, பச்சை வாழை, பேயன் வாழை, மலை வாழை முதலியன.

4. வாழைக்கன்றைச் சிறு பள்ளங்களில் நட்டுத் தண்ணீர் விடுவார்கள். அது முதலில் குருத்து விடும். பின் அக்குருத்துகள் நீண்டு விரிந்து இலைகளாகும். நன்ருக நீர் பாய்ச்சினல் வாழை செழித்து வளரும்.

5. மற்ற மரங்களைப்போல வாழை உறுதியாய் இராது. ஈரமான பட்டைகள் அடுக்கடுக்காய் இருக்கும். பட்டைகளுக்குள்ளே தண்டு இருக்கும். வாழை மரத்துக்குக் கிளைகள் இல்லை.

6. வாழை மரம் பத்தாம் மாதத்தில் குலை தள்ளும். வாழைக்குலையைத் "தாறு" என்பார்கள். வாழை, குலை தள்ளுமுன் ஒரு சிறிய இலை விடும். அதற்குக் கண்ணாடி இலை என்று பெயர். பிறகு பூவும் காயும் தோன்றும். காய் பச்சை நிறமாய் இருக்கும். பழம் மஞ்சள் நிறமாய் இருக்கும். ஒரு குலையில் இருபது சீப்புகள் வரையில் இருக்கும்.

7. வாழை, குலை தள்ளிய பின் பயன் தராது. ஆதலால் மரத்தை வெட்டிவிடுவார்கள். மரத்தடியில் கன்று தோன்றும். இந்தக் கன்றே பின் மரமாகும்.

8. வாழையின் இலை உணவு உண்பதற்கு உபயோகமாகும். மட்டையையும் தைத்து இலையாக உபயோகப்படுத்துவார்கள். வாழைப்பூவையும், காயையும், தண்டையும் கறி சமைப்பார்கள்.

9. வாழை மட்டையில் உள்ள நார் பூக்கட்ட உதவும். வாழை மரத்தைக் குலையோடு வெட்டி, கல்யாண வீடுகளுக்குக் கட்டுவார்கள். வாழை நாரைப் பக்குவப்படுத்தி துணி நெய்வார்கள்.



28. முருகன்

1. அண்ணா! இவன் யார்?

தம்பீ! இவன் தான் முருகன். முருகன் ஒரு நல்ல பையன். ஆதலால், முருகனை யாவரும் "முருகா! முருகா!" என்று அன்புடன் அழைப்பார்கள்.

2. முருகன் தினமும் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பான். எழுந்தவுடன் கடவுளை வணங்குவான். பல் துலக்கி கைகால்

களைச் சுத்தம் செய்வான். தாய் தந்தையரை வணங்குவான்.

3. முருகன், பெற்றோர்கள் சொல்வதைக் கேட்பான். அவர்கள் மனம் கோணமல் நடப்பான். அவன் தினமும் குளித்து நல்ல உடைகளை உடுப்பான். காலையில் தன் பாடங்களைச் செவ்வையாகப் படிப்பான். வீட்டில் இட்ட உணவை உண்பான். குறித்த நேரத்தில் பாடசாலைக்குப் போவான்.

4. முருகன், உபாத்தியாயருக்கு நல்ல பிள்ளையாக நடப்பான். தன் பாடங்களைத் தவருமல் ஒப்பிப்பான். அவன் வகுப்பிலும் முதலில் இருப்பான். உபாத்தியாயர் கற்பிப்பதைக் கருத்தாய்க்கேட்பான்.

5. முருகன் நல்ல பிள்ளைகளோடு கூடி மாலையில் விளையாடுவான். கெட்ட பிள்ளைகளோடு ஒருபோதும் சேரமாட்டான். அவன் இரவிலும் விளக்கண்டை உட்கார்ந்து தன் பாடங்களைப் படிப்பான். ஒழிந்த நேரங்களில் வீட்டு வேலைகளையும் செய்வான்.

6. அவன் எல்லாரிடத்திலும் அன்பாய் இருப்பான். பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுவான். எப்போதும் உண்மையே பேசுவான். அவன் விளையாட்டுக்காவது பொய்

சொல்லமாட்டான். அவனை யாவரும் நேசிப்பார்கள். முருகன் ஒரு நல்ல பிள்ளை அல்லவா?

பிள்ளைகளே! நீங்களும் முருகனைப்போல் நல்ல பிள்ளைகளாய் நடக்க முயலுங்கள்.

---

29. புத்தியுள்ளவனே பெரியவன்

1. ஓர் ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள்.

2. அந்தப் பணக்காரர் ஒருநாள் தன் பிள்ளைகள் இருவரையும் கூப்பிட்டார். பிள்ளைகள் இருவரும் தகப்பனிடம் வந்தார்கள்.

3. அவர் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு ரூபாய் கொடுத்து "பிள்ளைகளே! நீங்கள் இந்தப் பணத்தினால் ஏதாவது பொருள் வாங்கி வீடு நிறைய வையுங்கள். நான் இரவு எட்டு மணிக்கு வருவேன். உங்களில் யார் வீடு நிறைந்த பொருளை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு கொடுப்பேன்" என்று சொல்லி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீட்டையும் காண்பித்தார்.

4. இருவரும் அப்பணத்தை வாங்கிக் கொண்டு தனித்தனியே கடைக்குப் போனார்கள். மூத்தவன் வழியில் வைக்கோல் கட்டுக்கட்டாக இருப்பதைப் பார்த்து, அதுவே வீடு நிறையும் பொருள் என்று எண்ணினான். உடனே அதை விலைக்கு வாங்கி, வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து வீட்டில் நிரப்பிவைத்தான்.

5. இளையவன் போகும் வழியில் வீடு நிறைந்த பொருள் யாது என்று எண்ணிக் கொண்டே போனான். கடையில் எரிந்துகொண் டிருக்கும் விளக்கைப்பார்த்து, அதன் வெளிச் சமே வீடு நிறையும் பொருள் என்றெண்ணினான். உடனே ஒரு அழகான விளக்கை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான். வீட்டில் விளக் கேற்றிவைத்தான்.

6. இரவில் எட்டுமணிக்குத் தந்தை தனது இரண்டு பிள்ளைகளுடைய வீடுகளையும் பார்க்கப் போனார்.

7. மூத்தவன் வீட்டுக்குச் சென்று பார்த் தார். வீடு வைக்கோலினால் நிறைந்திருந்தது. அதைக்கண்டு மூத்த மகனது மதியீனத்துக்கு அதிகமாகத் துக்கித்தார்.

8. பின் இளைய மகன் வீட்டுக்குப் போனார். இளையவன், எதிர் சென்று தனது

தகப்பனாரை அழைத்துக்கொண்டு போனான். தகப்பனும் வீட்டுக்குள் நுழைந்து பார்க்க எங்கும் விளக்கொளி நிரம்பியிருந்தது.

9. விளக்கேற்றி வைத்த மகனது அறிவைக் கண்டு மனம் மிக மகிழ்ச்சியடைந்தார். அந்தப்பணக்காரர் தன் இளைய மகனது அறிவைக்கண்டு நல்ல வெகுமதி கொடுத்தார். யாவரும் இளையவனைக் கொண்டாடினார்கள்.

அறிவுள்ளவனையே யாவரும் விரும்புவார்கள்.

---

30. விடுகதைகள்

1. செப்பு நிறைய முத்து; அது என்ன?
(மாதுளம் பழம்)
2. அடி மலர்ந்தது நுனி மலராத பூ என்ன பூ?
(வாழைப்பூ)
3. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம்; அது என்ன?
(உள்ளங்கை)
4. ஊருக்கெல்லாம் ஒரு துப்பட்டி; அது என்ன?
(வானம்)
5. அப்பன் சொறியன், ஆத்தாள் சடைச்சி, அண்ணன் முழியன், நான் சர்க்கரைக்குட்டி; அது என்ன?
(பலாப்பழம்)
6. ஓட்டமாய் ஓடும், உருண்டு உருண்டு ஓடும்; பள்ளத்தைக் கண்டால் பாய்ந்து ஓடும்; அது என்ன?
(தண்ணீர்)

31. கரும்பு

1. கரும்பு என்பது ஒருவகைப் பயிர். அதில் பலவகை உண்டு. செங்கரும்பு, வெள்ளைக் கரும்பு, ரஸ்தாளிக் கரும்பு, ராமக்கரும்பு முதலியன.



2. கரும்பு கமுகு, தென்னை, பனை முதலியவைகளைச் சேர்ந்தது. கரும்பு உஷ்ணமான தேசங்களில் பயிராகும். கரும்பு நமது இந்தியாவில் அதிகமாகப் பயிராகிறது.

3. கரும்பு அழகான பயிர். அது பத்துப்பதினைந்தடி உயரம் வளரும். அதற்கு மூங்கிலைப்போல கணுக்கள் உண்டு. அதன் இலைகள் நீண்டு கூர்மையாய் இருக்கும். அதன் நுனியில் அழகான பூ பூக்கும்.

4. விளைந்த கரும்பைத் துண்டு துண்டாக வெட்டி வயலில் நடுவார்கள். அது சில மாதங்களில் வளர்ந்து விடும். நன்றாக விளைந்த பின் அதை அடியோடு வெட்டுவார்கள். அதிலுள்ள தோகைகளை வெட்டுவார்கள்.

5. பிறகு கரும்புகளைக் கட்டுகளாகக் கட்டி ஆலைக்குக் கொண்டு போவார்கள். ஆலையில் மூன்று உருளைகள் இருக்கும். அவைகளின் இடையில் கரும்பைக் கொடுப்பார்கள்.

6. கருப்பஞ்சாறு கீழே வைத்திருக்கும் பாண்டத்தில் விழும். சக்கை ஒரு பக்கம் விழும். கருப்பஞ்சாற்றைக் கொண்டுபோய் பெரிய பாண் டத்தில் இட்டுக் காய்ச்சுவார்கள்.

7. சாறு சிறிது நேரத்தில் மஞ்சள் நிறத் தோடிருக்கும். அதை மறுபடியும் பாகாகும் வரையில் காய்ச்சுவார்கள். அது நல்ல பதமான வுடன் அதை எடுத்து குழிகளுள்ள அச்சுப் பலகையில் வார்ப்பார்கள். சிறிது நேரத்தில் அது இறுகி அச்சுகளாகிவிடும். இதைத்தான் வெல்லக்கட்டி என்போம்.

8. வெல்லத்தைச் சுத்திசெய்து சர்க்கரை செய்வார்கள். கருப்பஞ்சாற்றைக் காய்ச்சிப் பாகானவுடன் குளிரவைப்பார்கள். பின் அதை எடுத்து உடைக்கக் கற்கண்டாகும்.

9. கருப்பஞ்சக்கை அடுப்பெரிக்க உதவும். வெல்லம் சர்க்கரை கற்கண்டுகளை வண்டிகளில் கடைக்குக் கொண்டு போய் விற்பனை செய்வார் கள். கரும்பையும் வெட்டி விற்பனை செய்வார்கள்.

10. ஆகவே, கரும்பு நமக்கு மிகவும் உப யோகமுள்ள பொருள்களில் ஒன்று.

32. இந்திய நாணயங்கள்

1. பாலர்களே! நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்து தேசம் என்று பெயர். இந்து தேசத்தில் வழங்கும் நாணயங்கள் இந்திய நாணயங்கள் எனப்படும்.

2. இந்த நாணயங்களின் ஒரு புறத்தில் நமது அரசர் உருவம் இருக்கும். மற்ற பக்கம் நாணயத்தின் மதிப்பு இருக்கும்.

3. இது ஒரு பைசா. இது செம்பினுல் செய்யப்பட்டது. எல்லா நாணயங்களிலும் இது குறைந்த மதிப்புடையது.

4. இது காலணு. இது மூன்று பைசாக்களைக் கொண்டது. இதுவும் செம்பால் ஆகியது.

5. இது ஒரு அணு. இது பன்னிரண்டு பைசாக்களைக் கொண்டது. நான்கு காலணு கொண்டுள்ளது. இந்த நாணயம் நிக்கல் என்ற ஒருவகை உலோகத்தால் செய்யப்பட்டது.

5. இது இரண்டணா. இது அரைக்கால் ரூபாய் எனப்படும். இதுவும் நிக்கலால் செய்யப்பட்டது. இது இரண்டு ஒரு அணா சேர்ந்தது.

7. இது நாலணா. இது கால் ரூபாய் என்றும் சொல்லப்படும். நான்கு அணாக்கள் கொண்டது ஒரு கால் ரூபாய். இது வெள்ளியால் செய்யப்பட்டது.

8. இது எட்டணா. இதை அரை ரூபாய் என்றும் சொல்வார்கள். இது இரண்டு கால் ரூபாய் கொண்டது. நான்கு அரைக்கால் ரூபாய் கொண்டது. இதுவும் வெள்ளியால் செய்யப்பட்டது.

9. இது ஒரு ரூபாயின் படம். இது இரண்டு அரை ரூபாய் கொண்டது. நான்கு கால் ரூபாய் கொண்டது. பதினாறு அணாக்கள் கொண்டது. ரூபாய் வெள்ளியால் செய்யப்பட்ட நாணயம்.

10. ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புடைய நாணயம் தங்க நாணயம். அதற்கு சவரன் அல்லது பவுன் என்று பெயர் வழங்குகிறது.



33. நரியும் திராட்சையும்

(ஆனந்தக் களிப்பு)

(1)

காட்டில் நரியொன்று நாளும்—நல்ல
வேட்டையில் இரைதின்று தனதிடம் மீளும்

(2)

சுற்றிச்சுற் றிப்பார்த்து வந்து—ஓர்நாள்
பற்றிப் பசிதீர உணவின்றி நொந்து

(3)

செடிகொடி நிறைவனம் கண்டு—நெஞ்சில்
அடிக்கடி தோன்றுத ஆனந்தங் கொண்டு

(4)

வேகமாய் வனத்திற்குள் ஓடி—அங்கே
ஏகமாய்ப் பழுத்துள்ள பழங்களை நாடி

(5)

குலைகுலை யாய்த் தொங்கும் திராட்சைப்—பழத்தில்
அலைகின்ற மனதோடு கொண்டதே பேட்சை

(6)

இந்தப் பழங்களை நாமே—தின்று
நொந்த மனதை மகிழச்செய் வோமே

(7)

என்று மனதிற்குள் எண்ணி—நரியும்
நன்றெனப் பழந்தின்னக் கோடியண்டை நண்ணி

(8)

அண்ணாந்து பார்த்தது மேலே—பழங்கள்
உண்ணக் கூடாதுள்ள உயரத்தி னாலே

(9)

தாவியே தாவியே குதித்துப்—பார்த்து
மேவியே பறிக்க முடியாததி லிளைத்து

(10)

சிச்சிச்சி இப்பழம் புளிக்கும்—தின்றால்
நிச்சயம் பற்கள் கூசித் தத் தளிக்கும்

(11)

வேண்டாமிப் பழமென்று வெறுத்து—ஏங்கித்
தூண்டாத விளக்கெனவே சோம்பியுடல் சிறுத்து

(12)

மேலிய நடந்திட்ட நரிபோலே—உலகில்
பலியாத பொருள்மீது வருமாசை யாலே

(13)

மண்டலந் தனில்மனிதர் எண்ணம்—கேட்டுக்
கொண்டடை வர்துன்பமதை யென்பதுவே திண்ணம்.

தனனதன தனனதன தனனா.

34. இடைப்பையனும் எதிரொலியும்

1. ஓர் ஊரில் ஒரு இடைப்பையன் இருந்தான். அவன் பெயர் கோபாலன். கோபாலன் சுறுசுறுப்புள்ள பையன். அவன் நாள்தோறும் ஆடுமாடுகளைக் காட்டுக்கு ஓட்டிக்கொண்டு போய் மேய்த்து வருவான்.

2. ஒருநாள் கோபாலன் ஆடுமாடுகளை வேறிடத்திற்கு ஓட்டிக்கொண்டு போனான். அந்த இடம் ஒரு மலையடிவாரம். அங்கு புல் நிறைய முளைத்திருந்தது. ஆடு மாடுகள் புல்லைக்கண்டதும் களிப்புடன் நாற்புறமுஞ் சென்று மேய ஆரம்பித்தன.

3. உச்சிவேளை வந்தது. வெயில் கொடுமையாய்க் காய்ந்தது. அதனால் கோபாலன் நிழலுள்ள இடம் எங்கே என்று பார்த்தான். மலையிலுள்ள ஒரு குகை அவனுக்குத் தெரிந்தது. உடனே கோபாலன் தன் கைத்தடியுடன் குகைக்குப் புறப்பட்டான்.

4. கோபாலன் குகைவாயிலையடைந்து பார்த்தான். உள்ளே இருட்டாயிருந்தது. மெதுவாய் உள்ளே நடந்தான். ஏதேனும் விஷப்பூச்சிகள் இருக்குமோ என்று தன் கைத்தடியைக் கீழே

தட்டினுன். உடனே கைத்தடியின் சத்தம்போல் இன்னெரு சத்தம் கேட்டது.

5. கோபாலன் உடனே திகைத்து நின்முன். உள்ளே யாராவது இருக்கிருர்களோ என்று எண்ணினுன். பயத்துடன் "யாரங்கே" என் ருன். அவன் அவ்வாறு சொல்லி வாய் மூடு வதற்கு முன் "யாரங்கே" என்ற எதிரொலி கேட்டது.

கோபாலன் :-நீ யார் ?
எதிரொலி :-நீ யார் ?
கோபால்ன் :-(கோபத்துடன்) யாரடா நீ ?
எதிரொலி :-யாரடா நீ ?
கோபாலன் :-ஏ மூடா ! இங்கே வா !
எதிரொலி :-ஏ மூடா ! இங்கே வா !
கோபாலன் :-உன்னை உதைப்பேன்
எதிரொலி :-உன்னை உதைப்பேன்.

6. இதைக்கேட்டதும் கோபாலன் மிகவும் பயந்து விட்டான். அவன் கோபமெல்லாம் எங்கேயோ போய்விட்டது. வேகமாய் வெளியே வந்தான். ஆடு மாடுகளை யெல்லாம் ஓட்டிக் கொண்டு வீட்டை யடைந்தான். அப்பொழுது தான் அவன் பயம் கொஞ்சம் நீங்கியது.

7. கோபாலன் சீக்கிரம் வந்துவிட்டதை அவன் தாய் கண்டாள். 'ஏன் சீக்கிரம் வந்து

விட்டாய்' என்று கோபாலனைக் கேட்டாள். கோபாலன் நடந்தவற்றை யெல்லாம் விவர மாய்ச் சொன்னான்.

8. கோபாலன் தாய், சங்கதியை உணர்ந்து கொண்டாள். அவள் அவனைப் பார்த்து "கோபாலா! நீ எந்தச் சொற்களைப் பேசினாயோ, அந்தச் சொற்களையே திருப்பிக் கேட்டாயல்லவா? அந்தச் சத்தம் உன் எதிரொலியே தவிர வேறன்று. அங்கே எவரும் இருந்து பேச வில்லை. நீ கோபத்தால் கெட்ட சொற்களைப் பேசி யிருக்கிறாய். எதிரொலியும் கெட்ட சொற்களையே சொல்லியிருக்கிறது. அதனால் நீ பயந்து ஓடி வந்துவிட்டாய். நீ நல்ல வார்த்தைகளைப் பேசி யிருந்தால் எதிரொலியும் நல்ல வார்த்தை களையே பேசியிருக்கும். நீயும் பயந்து ஓடி வந்திருக்க வேண்டியதில்லை.

9. கோபாலா! இதிலிருந்து நீ தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா? நீ ஒருவரிடத்தில் நல்ல மொழிகளைப் பேசினால் அவரும் நல்ல மொழிகளையே பேசுவார். கெட்ட மொழிகளைப் பேசினாயோ, அவரும் கெட்ட மொழிகளையே பேசுவார் என்பதுதான். நீ எல்லோரிடத்திலும் அன்பாய்ப்பேசு. எல் லோரும் உன்னிடம் அன்பாய்ப் பேசுவார்கள்" என்றாள்.

10. கோபாலன் தன் தாய் சொன்னதைக் கேட்டு, "அம்மா! நீங்கள் சொன்னபடியே நடந்து நல்ல பிள்ளை என்று பெயரெடுப்பேன்" என்றான்.

35. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.

3. மாதாவை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

5. போகாத இடந்தனிலே
போக வேண்டாம்.

6. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

7. நல்லிணக்கம் இல்லாரோடு
இணங்க வேண்டாம்.

8. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.

9. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்க வேண்டாம்.

10. தனம் தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம்.

11. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

12. கொலை களவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

13. குற்றம் ஒன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

14. கற்றவரை ஒரு நாளும்
பழிக்க வேண்டாம்.

15. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.

16. மூத்தோர் சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.

17. முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டாம்.

18. போகவிட்டுப் புறஞ்சொல்லித்
திரிய வேண்டாம்.

19. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டாம்.

20. செய்த நன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

21. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

36. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புற ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. சனி நீர் ஆடு.
14. தந்தை தாய்ப்பேண்.
15. நன்றி மறவேல்.
16. நீர் விளை ஆடேல்.
17. நோய்க்கு இடம் கொடேல்.
18. பெரியாரைத் துணைக்கொள்.
19. வித்தை விரும்பு.
20. உத்தமனாய் இரு.

121633

RCR 1303

திருசிரபுரம்

செயின்ட் ஜோசப் கலாசாலைத்

தமிழாசிரியர்

வித்துவான். ரா. மீனாட்சிசுந்தரம்

எழுதிய பாடப்புத்தகங்கள்

நமது தமிழ் வாசகம்

		ரூ. அ. ப.
,,	முதற் புத்தகம்	0—2—6
,,	இரண்டாம் புத்தகம்	0—3—0
,,	மூன்றும் புத்தகம்	(அச்சில்)
,,	நான்காம் புத்தகம்	,,

கிடைக்குமிடம்:—

தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்

திருச்சிராப்பள்ளி

Tamil Literature Publishing Society,
TRICHINOPOLY.

Printed at Singaram Press, Big Bazaar, Trichinopoly